## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.7/2020 | Date : 12.10.2023 | DW1 |
|---|---|---|
| Name: ராமசாமி | S/o. **பெருமாள்** | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 12.40 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் மின்சார வாரியத்தில் போர்மேனனாக வேலை செய்து வருகிறேன். எனக்கு எவ்வாறு வேலை கிடைத்தது என்றால் மின்சார துறைக்கு நிலம் எடுக்கப்பட்டதற்கு ஈடாக வேலை கிடைத்தது. 2, 3 பிரதிவாதிகள் கையெழுத்து போட்டுக்கொடுத்தன் அடிப்படையில்தான் எனக்கு வேலை கிடைத்தது என்றால் சரிதான், அதற்கு அவர்களுக்கு பணம் கொடுத்தேன். 2, 3 பிரதிவாதிகள் வீடுகளில் ஒருவருக்கு பெண் கொடுத்து பெண் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதில் வாதிக்கும் நான்கில் ஒரு பங்கு உரிமை உள்ளது என்றால் சரிதான், அதை கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் இறப்பிற்கு முன்பு வாதியும் சேர்ந்துதான் விவசாயத்திற்கு செலவு செய்து வந்தார் என்றால் இல்லை. என் தாயார் விவசாய பணி செய்த போது வாதியும் தாயாரோடு சேர்ந்து விவசாய வேலைகளை செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு சம்பளம் வந்தது என்றால் ரூ.83,000/- வருகிறது. பணி ஓய்வு பெற்ற பிறகு ஓய்வு பணப்பலன் எவ்வளவு வந்தது என்றால் முப்பத்தாறு லட்சம் வந்தது. மேற்படி ஓய்வு பணப்பலனை என்ன செய்தேன் என்றால் என் பிள்ளைகளுக்க பிரித்துக்கொடுத்தேன். வாதிக்கும், பிரதிவாதிக்கும் தலா ஆறுலட்சம் கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பணம் வாங்கி கொண்டு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்காத சமயத்தில் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் உறவினர் என்பதால் கொடுக்கவில்லை. வாதி வழக்கை தாக்கல் செய்த பிறகாவது காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தற்போதாவது புகார் கொடுத்தேனா என்றால் எப்போதும் கொடுக்கவில்லை. நான் வாதிக்கு பணம்

கொடுத்தது உண்மையாக இருந்திருந்தால் நான் வாதி மீது புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல, நான் வாதிக்கு பணம் கொடுத்தது உண்மை. முதல் விசாரணை சாட்சியத்தில் கண்ணுற்ற சாட்சியான ஆண்டியப்பன் மகன் செல்வராஜ் என் மனைவியின் தம்பி என்றால் சரிதான். ராமர் மகன் மாரியப்பனும் என் மச்சான் என்றால் சரிதான், அவர்தான் பணம் வாங்கி கொடுத்தார். பெருமாள் மகன் கண்ணனும் என் உறவினர் என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சி என்று மேற்படி மூன்று நபரை சொல்லியுள்ளேன், அனால் அவர்கள்தான் பணம் வாங்கி கொடுத்தார்கள் என்ற சங்கதியை என்னுடைய பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்தது உண்மை என்றால் மேற்படி சங்கதிகளை பதிலுரையில் சொல்லியிருப்பேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், 2, 3 பிரதிவாதிகளும் சேர்ந்து வாதியை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், 2, 3 பிரதிவாதிகளும் சேர்ந்து விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்ததில் சந்தை மதிப்பு மூன்று லட்சம் என்று மொத்தமாக பனிரெண்டு லட்சம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்தில் நான்கில் ஒரு பங்கு உரிமை உள்ளது என்றாலும் நான் பணம் கொடுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கி கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சுத்தமான கரங்களோடு நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும், வாதி கோரியவாறு இந்த வழக்கு தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.